

# ஈர நிலத்தை எதிர்பார்த்து

மன்னார் பெனில்

வெளியீடு:
புன்னகை அமைப்பு

JPL
C13180

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

000088

# ஈர நிலத்தை எதிர்பார்த்து

பொதுசன நூலகம்
10 JUN 2020
மாநகரசபை
யாழ்ப்பாணம்

மன்னார் பெனில்

13180 CC

KOHA JPL

வெளியீடு:

Smile Foundation
For Education & Livelihood
புன்னகை அமைப்பு

276708

276708 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8111
880000

# நூல் விபரம்

நூலின் பெயர் : ஈர நிலத்தை எதிர்பார்த்து
நூலின் வகை : புதுக்கவிதை
நூலாசிரியர் : மன்னார் பெனில்
வெளியீடு : புன்னகை அமைப்பு
பக்கங்கள் : 90
பிரதிகள் : 500
பதிப்புரிமை : ஆசிரியருக்கே
அட்டைப்படம்,
பக்க வடிவமைப்பு: எஸ்.விஜய்
பதிப்பு : ஜூலை, 2017 (இரண்டாம் பதிப்பு)
தொடர்பு : 077 9689972
மின்னஞ்சல்: mannarbenil83@gmail.com
முகநூல்: Mannar Benil
அச்சகம் : விஜய் அச்சுப் பதிப்பகம்,
077 9009491 / 024 2225799
ISBN : 978-955-38283-0-9
விலை : 250/-

10 JUN 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர நிலத்துக்காய்
எனை வித்திட்ட என் அன்னை
பிரான்சிஸ் மரியைக்கும்,
மழை மேகமாய் வந்து உயிர் தந்திட்ட
என் மனைவி பெனில் வினாவுக்கும்

# சமர்ப்பணம்

பொதுசன நூலகம்
10 JUN 2020
மாநகர
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போருக்குப் பின்னரான சமகால யதார்த்தத்தைச் சித்தரிக்கும் கவிதைகள்.

மனதைப் பாதிக்கும் ஒரு சிறு சம்பவம் கூட கலையாக, இலக்கியமாக உருவெடுக்கலாம். ஒவ்வொரு நாளும் பலவித இன்பியல் அல்லது துன்பியல் நிகழ்வுகளை மனிதன் கடந்து செல்கிறான். இவற்றை வெற்றிகரமாக எழுத்தில் வார்ப்பது என்பது ஒரு படைப்பாளியின் தனித்திறமையைப் பொறுத்த விடயமாகும்.

இக்கவிதைத் தொகுதியில் சிறியதும் பெரியதுமாக 45 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலான கவிதைகள் போருக்கும் பின்னரான தமிழர்களின் வாழ்வியல் அவலங்களைப்பற்றிப் பேசுகின்றன. சமகால அவலங்களைப் பேசினாலும் கவிஞர் விரக்தியடையாமல், நம்பிக்கையை இழக்காமல் இருக்கிறார் என்பதை இந்நூலின் தலைப்பினூடாகத் தெரியப்படுத்துகிறார். ஆம், ஈரநிலத்தை அவர் எதிர்பார்த்திருக்கின்றார்.

நம்பிக்கைதானே வாழ்க்கை!

"இருளை விரட்ட முடியாவிட்டாலும்

இருள்படிந்த கொரூர முகங்களைப்பற்றி

உங்களிடம் சின்னதாய்

உணர்வை விதைக்கலாமென

வந்துள்ளேன்"

என தனது நோக்கத்தை முன்வைத்து பெனில் தனது கவிதைகளைத் தந்துள்ளார்.

## போருக்குப் பின்னரான சூழ்நிலைகள்

ஈழ மண்ணில் போர் நடைபெற்ற காலங்களில் போர்க்காலக் கவிதைகள் பல மேலெழுந்தன. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் இப்போது போருக்குப் பின்னரான காலத்து (Post-warPeriod) கவிதைகள் மேலெழுந்துகொண்டிருக்கின்றன. அந்த வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈர நிலத்தை எதிர்பார்த்து" என்ற இந்தக் கவிதைத் தொகுப்பும் முக்கியமானதாக அமைகின்றது.

"சாட்சியங்களை அழிப்பதனால்

நடந்தவை இல்லையென்றதாகிவிடாது.

குரல்வளைகளை நெரிப்பதனால்

உண்மைகள் ஊமைகளாகிவிடாது

ஒரு நாள் விழவு வரும்

அப்போது நீ செய்த கொடுமைகளுக்கான

முடிவை எழுதும் ஒரு நல்ல பேனா

அதுவரை."

என்ற கவிஞரின் வார்த்தைகள் போருக்குப் பின்னரான ஈழத்து மக்களுடைய உணர்வுகளின் வெளிப்பாடாக அமைகின்றது.

"தேன்வதை திருடிய வஞ்சகன்" என்ற கவிதையில் தேனீக்களாக ஈழத்தமிழரும், அத்தேனீக்களை அழிக்க முனைந்து முதலில் தோற்றுப்போன கரடிகளாக இலங்கை இராணுவம், கரடி கூட்டுச்சேர்ந்த வேடனாக அந்நிய நாடுகளும் உருவகப்படுத் தப்படுகின்றன. ஈற்றில் இலங்கை இராணுவம் தமிழர் தாயகத்தில் நிலைகொண்டுள்ள நிலைமையை கவிஞர் இப்படிக்கூறி தன் கவிதையை முடிக்கின்றார்.

"தேனைத் தின்ற கரடி அத்தோடு நின்றுவிடவில்லை.

அந்த மரத்தடியிலேயே இன்று தங்கிவிட்டது".

யுத்தத்திற்குப் பின்னர் இலங்கை நாட்டின் பல்வேறு பகுதிகளில் எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. காணாமலாக்கப் பட்டவர்களுக்கும் பற்றிய இக்கவிதை இவ்வாறு நிறைவு பெறுகின்றது.

"தோண்டி எடுப்பதை விட்டு விட்டு

தோண்டி எடுத்த எச்சங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடைய சதியால் வீழ்ந்ததென்ற
பின்புலத்தைத் தோண்டுங்கள்
ஏதாவது வெளி வருகிறதா எனப் பார்ப்போம்"

போருக்கும் பின்னர் மாவீரர் துயிலும் இல்லங்கள் இலங்கை இராணுவத்தால் அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்ட துயிலும் இல்லங்களைப் பற்றிக் கூறும் கவிஞர்.

"இருந்த இடம் தெரியவில்லை
இருந்தும் நாம் கடந்துபோகையில்
நின்று தலைவணங்க மறந்ததில்லை" என்கிறார்.

படையினரால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட தனியார் காணிகளின் நிலையை கவிஞர் அழகாக இப்படி எடுத்துரைக்கின்றார்.

"ஏர் பூட்ட மாடு இருக்கு
காணி பூமி அதுவும் இருக்கு
உழுவதற்கு ஆளும் இருக்கு
விதைநெல்லை வீசியெறிந்தால்
பலனை அள்ளித்தர விளைநிலம் காத்திருக்கு
இத்தனைக்கும் தடையாக
கொமாண்டோ கம்பி வேலியிருக்கு"

தமிழ் இளைஞர்களைப் பொறுபொறுத்தவரை சிறைக்குள் இருக்கும் பாதுகாப்பு சிறைக்கு வெளியே இல்லை என்ற கசப்பான உண்மையை "பீதியுடன் பாதி நாட்கள்" என்ற கவிதை சிறப்பாகச் சொல்கிறது.

"முட்கம்பி முகாமிற்குள்ளிருந்து விடுதலையாகி
தம் சொந்த ஊருக்குப் போகப்போவதை எண்ணி
கோழிக்குஞ்சுகளுக்கோ உள்ள பதைபதைப்பு.
இங்கு இருந்த காவல் அங்கு அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்காதே என்றெண்ணி,
காரணம் கூட்டுக்குள்ளிருந்தால்
குறிவைக்க முடியாதே என்று
வெளியில்விடும் வேட்டை மிருகங்களை நினைத்து".

தூங்குவதற்குத்தான் தாலாட்டுப் பாடுவார்கள். இங்கே தூங்க வேண்டாம் எனச் சொல்லி கவிஞர் தாலாட்டுப் பாடுகின்றார். இறுதிப்போரின்போது நிகழ்ந்த மனிதப் பேரவலங்களை ஒவ்வொன்றாகச் சொல்லி "தமிழ் மகனே தூங்கிவடாதே" எனக் கூறுகின்றார்.

**சமூக சீர்கேடுகள்**

சில கவிதைகள் சமூகச் சீர்கேடுகளைப்பற்றி பேசுகின்றன.

"சிறுவர் துஷ்பிரயோகம்" இன்று நமது சமூகங்களில் அதிகம் பேசப்படுகின்ற முக்கிய சமூகப் பிரச்சினையாக உள்ளது. இன்றைய சமூகத்தீமைகளில் ஒன்றான இவ்விடயத்தையும் கவிஞர் தனது கவிதையின் பாடுபொருளாக்கியுள்ளார். "வாராயோ வல்லோனே என்ற கவிதையில்,

"பிஞ்சுகளை பஞ்சணைக்கிழுத்து
வஞ்சனை செய்வோரை வதம் செய்ய
காக்க வேண்டிய வேலியே
கசக்கிப் பிழியும் இழிசெயல் செய்வோரை
இல்லாது ஒழித்திட
பள்ளிசெல்லும் பிள்ளைகளை
ஆசானென்ற போர்வையில்
ஆபாசம் புரிந்து அநியாயம் செய்யும்
பாதகர்களை வதம் செய்ய
வரவேண்டும் நீ வரவேண்டும்"

பொது நூலகம்
10 JUN 2020
மாநக
யாழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளால் கைவிடப்படும் பெற்றோரின் பரிதாப நிலை இன்று சமூகத்தின் அக்கறைக்குரிய விடயமாக மாறியிருக்கின்றது. பிள்ளையால் கைவிடப்பட்ட ஒரு தாயின் உணர்வலைகளை கவிஞர் இப்படிச் சொல்கிறார்.

"உழைத்தோய்ந்த உன் செருப்புக்கூட
உன் வீட்டுவாசலில்
நிம்மதியாய் ஓய்வெடுக்கையில்
இடுப்புவலியெடுத்து உனைப்பெற்ற நானோ
நடுத்தெருவில் நாதியற்று"

**உருவகங்கள்**

பல கவிதைகளில் உருவகங்கள் காணப்படுகின்றன. மணிமுடியின் கெடுபிடி என்ற கவிதை இப்படி ஆரம்பிக்கின்றது.

"வெட்டுக்கிளிகளை வேட்டையாட
ஊருக்குள் யாரோ
அத்துமீறிப் புகுந்துவிட்டதாய் பொய் சொல்லி
சிட்டுக்குருவிகளை குறிவைக்கின்றன
வெட்டுக்கிளிகள்"

இங்கே இலங்கை இராணுவத்தினர் வெட்டுக்கிளிகளாவும், தமிழ் இளைஞர் இளைஞிகள் சிட்டுக்குருவிகளாகவும் உருவகப்படுத் தப்படுகின்றனர்.

"கொஞ்சக் காலம் தான்" என்ற உருவகக் கவிதையில் தாய் மண்ணில் நிலைகொண்டுள்ள அந்நியப் படைகள் விரைவில் இல்லாமல்போகும் என்ற நம்பிக்கையை கவிஞர் இவ்வாறு முன்வைக்கின்றார்.

"ஒரு நாள் விடியும்
எம்மவரின் குருதி அமில மழையெனப் பொழியும்.
அன்றோடு கள்ளிச்செடியும் கற்றாளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதொழிந்து போகும்.

குள்ளநரிக்கூட்டம் ஊரைவிட்டு ஊழையிட்டோடும்".

இவ்வாறு இன்னும் பல உருவகங்களை இந்நூலில் காணலாம்.

**சில குறிப்புகள்**

இக் கவிதைத் தொகுதியில் இடம்பெற்ற கவிதைகளில் சிறப்பானவை மட்டுமே இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. சிறப்பானவற்றை வெளிக்கொணர்ந்து பாராட்டுவதோடு ஏனையவை பற்றிய மதிப்பீட்டை, சில குறிப்புகளை முன்வைப்பது கவிஞரின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

சில கவிதைகளில் "கவித்துவம் குறைந்து "வசன சாயல்" மேலோங்கியிருப்பதைக் காண முடிகின்றது. எதிர்காலத்தில் கவிஞர் இது விடயத்தில் கூடிய கவனம் எடுப்பது நன்று. வசன சாயலைத் தவிர்த்து கவித்துவம் நிறைந்த கவிதைகளை நாம் படைக்க வேண்டுமாயின் தரமான பல கவிதை நூல்களை வாசிக்க வேண்டும். தொடர்ச்சியான வாசிப்பு நமது கவித்துவ ஆளுமையை விசாலமாக்கும் என்பது திண்ணம்.

உருவகங்கள் கவிதைக்கு அழகைக் கொடுக்கின்றன என்பது உண்மை. ஆனால் அளவுக்கு அதிகமாக பல கவிதைகளில் உருவகங்களைப் பயன்படுத்துவது வாசகருக்குச் சலிப்பை ஏற்படுத்தக்கூடும். பல கவிதைகளில் பறவைகள், மிருகங்கள் உருவமாகக் கையாளப்பட்டுள்ளன.

**நிறைவாக**

போருக்குப் பின்னரான சமகால யதார்த்தங்களை வெளிப்படுத்த வேண்டும் என்ற கவிஞரின் ஆர்வம், ஆதங்கம் பாராட்டப்பட வேண்டியதே. அதிலும் உருவகங்கள், குறியீடுகள் மூலம் தனது எண்ணங்களை வெளிப்படுத்த விளைவது மகிழ்ச்சிக் குரியதே. ஆயினும் தனது எண்ணங்களை வெளிப்படுத்தும் முயற்சியில் அவர் எந்த அளவுக்கு வெற்றிபெற்றுள்ளார் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்குரியது. இலக்கியங்கள் ஏற்றமும், எழிலும் பெற்றுக் காலங்களைக் கடந்தும், கருத்துக்களைக் கடந்தும் அழியாமல் என்றும் நிலைபெற்று விளங்குவன. கூறும் கருத்தால் மட்டுமன்றி, உணர்த்தும் திறனாலும் அவை உயிர்பெற்றுத் திகழ்வன. "கருத்தை ஒட்டியே மொழி நடை அமைகிறது. அவரவர் மனப்பண்புக்கும் தன்மைக்கும், கல்விப் பயிற்சிக்கும் முயற்சிக்கும் ஏற்றவாறு மொழி நடை இருக்கும். இலக்கணம் இலக்கியம் நன்கு கற்றுவிடுவதாலே மட்டும் நல்ல மொழிநடை அமைந்து விடுவதில்லை" (அ.கி.பரந்தாமனார், நல்ல தமிழ் எழுத வேண்டுமா?, ப.384) என்பர். இந்த அடிப்படையில் இக்கவிதைத் தொகுப்பில் கவிஞரின் மொழிநடை அவருக்கே உரித்தான தனித்துவத்தோடு விளங்குகிறது.

"புதுக்கவிதைக்கெனத் தனி உருவம் இல்லை. கவிஞர்களின் தனித்தன்மைக்கும் மனவளத்திற்கும் ஏற்ப உருவங்கள் மாறுபடுகின்றன. அதற்கேற்ப புதுக்கவிதையின் மொழிநடை அமைகிறது" (ச.கலைச்செல்வன், புதுக்கவிதை நடையியல் ஆய்வு,ப.123) என்ற வார்த்தைகள் இக்கவிதைகளையும், இக்கவிஞரின் மொழி நடையையும் புரிந்துகொள்ள நமக்கு உதவியாக உள்ளன.

இது கவிஞர் பெனிலின் இரண்டாவது நூல். பெனிலின் கவிதையாக்கங்கள் தொடரவேண்டும், இன்னும் சிறப்பான கவிதைகளை அவர் எதிர்காலத்தில் தரவேண்டும் என ஆசித்து வாழ்த்துக்கள் கூறுகின்றேன்.

**அருட்திரு.தமிழ்நேசன் அடிகளார்**
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஈழ மண்ணின் வடக்கு மாகாணத்து மன்னார் மாவட்டத்து காத்தாங்குளம் வட்டக்கண்டல் பிறப்பிடமாவும் மன்னார் தோட்ட வெளியை வாழிடமாகவுங் கொண்டவர் கவிஞர் பெனில்

முள்ளந்தண்டுப் பாதிப்பினால் சக்கர நாற்காலியையே தனது நடமாடும் சிம்மாசனமாகக் கொண்டு கவிராச்சியும் நடத்தி வரும் மன்னார் பெனில் என்னும் புனைபெயர் கொண்ட பிரான்சிஸ் ஓர் அசாதாரணமான தன்னம்பிக்கையாளர்.

பதினெட்டு வயது வரை ஓடியாடித்திரிந்த இவரது உடல் மரத்திலிருந்து தவறி விழுந்ததால் பெரும் பாதிப்புக்குள்ளாகி படுக்கையை நாடியது. முள்ளந்தண்டில் ஏற்பட்ட பாதிப்பினால் நெஞ்சுப்பகுதிக்குக் கீழ் உணர்விழந்து போய்விட்டது கட்டுக்க டங்காத வைத்தியச் செலவினால் கட்டுடல் கட்டுப்பாட்டை இழந்தது. பணக்காரனுக்கு மட்டுமே வாழ்வளிக்கும் வைத்திய வசதி கொண்ட எம் நாட்டு அரசாட்சி அரசியலை எண்ணி "தனி ஒருவனுக்கு மருந்தில்லை எனில் இந்த சகத்தினை அழித்திடு வோம் என்று கொதித்தெழு உயர்ச்சி தூண்டுகிறது.

தனது முள்ளந்தண்டுப் பாதிப்பை விட தமிழின் தமிழரின் தமிழ் மண்ணின் முள்ளந்தண்டுப் பாதிப்பையே பெரும் பாதிப்பாகக் கருதும் கவிஞராகவும் தனது உடலின் பெரும்பகுதி உணர் விழந்ததால் தனக்கு ஏற்படுகிற துன்பத்தைவிட தமிழரில் பெரும்பாலானவர்களின் உணர்விழந்த வாழ்வையே பெரும் துன்பமாகக் கொண்டு துடிக்கும் ஒரு உணர்ச்சி மிக்க கவிஞராகவும் நான் இவரைப் பார்க்கிறேன்.

கவிஞர் மன்னார் பெனிலின் "வலியின் விம்பங்கள்" என்ற முதலாவது கவிதைத்தொகுப்பு பல செய்திகளை எனக்குச் சொல்லியது. அவரோடு நேரடியாக உரையாடியது இன்னும் பல செய்திகள் எனக்கு கிட்டின.

போராட்டத்தையே வாழ்க்கையாகக் கொண்டிருந்தவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையையே போராட்டமாகக் கொண்டிருக்கும் இக்கவிஞர் எவ்வளவு போற்றுகிறார் என்பதை இக்கவிதைத் தொகுப்பினூடாக உள்நுழைந்து பார்க்கும் போது தெரிகிறது. "ஈர நிலத்தை எதிர்பார்த்து" என்ற இக்கவிதை தொகுப்பின் பெயரே இவரது உள்ளக்கிடக்கையை உய்த்துணர வைக்கிறது. கவிதைத்தொகுப்பு அமைந்துள்ளது. புதுக்கவிதைக்கு இது ஒரு இலட்சணம் என்ற அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

தொன்மம், படிமம், குறியீடு என்பவை இருண்மையற்ற வகையில் அமைந்து எளிய நடைமுறைச் சொற்களோடு ஒரு கவிதை அமையுமாயின் அது நல்ல புதுக்கவிதையாக அமையும் என்பது எனது அபிப்பிராயம் இத் தொகுப்பிலுள்ள கவிதைகள் பலவற்றில் இந்தத்தன்மையை நான் காண்கிறேன். வெட்டுக்கிளி, சிட்டுக்குருவி, கொண்டங்கிளார், மசுக்குட்டி, தேனீ, கரடி, வேடன், மாரித்தவக்கை, முதலை, கோட்டான், பூதம், கரப்பான்பூச்சி, பல்லி, ஓணான், நாய், கவரிமான், குள்ளநரி, கழுதை, கழுகு, பச்சோந்தி, கற்றாளை, கள்ளிச்செடி, மணி இலையான், கறையான், காட்டெருமை, காக்கை, குயில், பன்றி, கருவண்டு, போதிமரம், வல்லூறு, கோழி ,வெண்புறா முதலானவற்றை உருவகப்படுத்தி அல்லது குறியீட்டு வடிவில் எமது சமகாலப் பிரச்சினைகளை அருமையாக கவிதைகளாக் கியிருக்கிறார் இக் கவிஞர். தேன் வதை திருடிய வஞ்சகன் என்ற கவிதையில்

"தேனைத் தின்ற கரடி
அத்தோடு
நின்றுவிடவில்லை
அந்த மரத்தடியிலேயே
இன்று தங்கிவிட்டது."

என்று அருமையாக சொல்கின்றார் "சிறையில் வாடும் காணி" கைதாகும் எலும்புக்கூடுகள்" "ஈர நிலத்தை எதிர்பார்த்து" ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் தலைப்புக்கள் உள்ளடக்கத்தை முழுமையாக வெளிக்காட்டுகின்றன.

"இழந்தவை போதும்

இருப்பவை துளிர்விட

விரைந்து வா

வான் மழையே

விரைந்து வா....

என்று இவர் அழைப்பது உண்மையில் வான் மழையை அல்ல.

கொத்துக்

குண்டுகளுக்கிடையே

என் உயிர்

சிக்கித் தவித்த போது

பதுங்கு

குழியாயிருந்து எனை

பாதுகாத்தவளே

படைவீரர் உனை

பாதகம்

செய்த போது

மீட்கமுடியா

பாவியாகிப்

போனேனே நான்.

என்று நன்றி மறந்தவனாய் இக்கவிஞர் புலம்புவது இவரின் புலம்பலாக மட்டுமல்லாதல் தமிழர்கள் அனைவரினதும் புலம்பலாகவே என் காதுகளில் ஒலிக்கின்றது. "சூது கவ்வும்" என்ற கவிதை வெள்ளைக்கொடி விவகாரத்தை வெகு அழகாகச் சொல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சமூக அவலங்களை இத் தொகுப்பிலுள்ள கவிதைகள் நேர்த்தியாக உணர்வோட்டத்தோடு சொல்கின்றன. இது அணிந்துரை என்பதால் நாள் ஆய்வுக்குள் புகுவது அழகாகாது என்பதால் சில பதச் சோறுகளோடு விட்டு விடுகின்றேன்.

தனது முதல் கவிதைத் தொகுப்பை தனது தந்தைக்கும் தனது மூத்த சகோதரிக்கும் சமர்ப்பணமாக்கிய இக்கவிஞர் இக் கவிதைத் தொகுப்பை தனது தாய்க்கும் தனது மனைவிக்கும் சமர்ப்ப ணமாக்கி இருக்கிறார்.

உறுதி குலையாத உள்ளங்கொண்டவராய் "சாதித்தே தீருவேன்" என்ற தன் நம்பிக்கை கொண்டவராய் வாழ்க்கையோடு நாளாந்தம் போராடிக் கொண்டிருக்கும் கவிஞர் மன்னார் பெனில் இன்னும் படைத்துத் தன் வலி மறக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

இவரது எதிர்பார்ப்பு இறையருளால் இனிதே நிறைவேறி எல்லாரும் எல்லாப் பெரும் பேறுகளும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன். இத்தொகுப்பு வெற்றி பெறவும் பயன்படவும் எனது வாழ்த்துக்கள்.

இன்னும் எழுதுக இனிதாய் எழுதுக எழுக கவிஞரே இந்த மண் ஈரமாகும் உங்கள் எண்ணம் பயிராகும்.

அன்புடன்

**அகளங்கன்**
தமிழ் அதர்,
இல.90, திருநாவற்குளம்,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

கவிதை என்ற பெரும்பரப்பில் தடம்பதித்து துடுப்பிடும் இளவல்கள் வரிசையில் இந்நூலாசிரியர் பெனில் குறிப்பிடத்தக்கவர்.

ஏற்கனவே சில நூற்பிரசவங்களைக் கண்ட பெனில் இந்த வலியை உணர்ந்தும் இதன் பின் கிடைக்கும் மகிழ்ச்சிக்காக மற்றுமொரு கவிநூலினை இன்று பிரசவித்து நிற்கின்றார். மகிழ்ச்சி

எமது இனத்தின் அடையாளமாக எம் தாய்மொழி தமிழ் உள்ளது. தொடர்பாடலுக்கான ஒன்றாக மொழி இருந்தாலும் இன்று சமூக மேம்பாட்டு வளர்ச்சிக்கு இன்றிமையாததாக இது உள்ளது. மொழியை ரசித்து அதன் நயங்களை ஆய்ந்து சொற்களை பொருத்தமான இடங்களில் கட்டிச் சேர்த்து கட்டுக்குலையாமல் கருத்துச் சிதறாமல் கவினுட்பத்துடன் இறுக்கமாக செதுக்குவதே கவிதைகளாகின்றன.

இதில் எம் பிரதேசங்களில் வாழும் பிள்ளைகள் தாம் வாழும் சூழலில் காணப்படும் முரண்பாடுகளை தமது கவிதைகளில் வார்த்து மகிழ்வதை நான் காணக்கூடியதாக உள்ளது. இது ஆரோக்கியமாக ஒரு விடயமாகும். கவியைப் படைப்பவர் இயற்கையோடு முரண்பட்டுக் கொள்கிறார். சமூகத்தோடு முரண்பட்டுக் கொள்கிறார். தன்னுடன் முரண்பட்டுக்கொள்கிறார். அன்றாடம் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து நெருடி மிதக்கின்ற பண்புகளை கவிதையாய் ஆக்குகின்றார். இன்றைய சூழலில் யாரிமும் சொல்ல முடியாத அல்லது முரண்பட முடியாத ஆதங்கங்களை கவிதைகள் ஊடாக எழுதி அதில் ஆத்ம திருப்தியும் அடைய முற்படுகின்றார்.

உலகில் செம்மொழி என அடையாளங் காணப்பட்ட ஆறு மொழிகளில் ஒன்றான வளமான தமிழ் மொழியின் சொந்தக்காரர்கள் என்பதனை எண்ணி நாம் பெருமை கொள்ள வேண்டும். அந்த மொழி வளர வேண்டுமாயின் இவ்வாறான இலக்கியங்கள் வளர வேண்டும். அது பேரிலக்கியமோ இல்லை சிற்றியலக்கிய மோ என்பது முக்கியமில்லை. படைக்கும் ஆர்வமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காக எடுக்கும் முயற்சியுமே இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவைகளாகும்.

எனவே மன்னார் தமிழ்ச் சங்கத்தின் மற்றுமொரு வெளியீடாக கவிஞர் மன்னார் பெலின் "ஈரநிலத்தை எதிர்பார்த்து" கவிநூலை வெளியீடு செய்வதிர் நாம் மிக்க மகிழ்வடைகிறோம்.

இவ்வாறான வெளியீடுகள் தொடர எனது வாழ்த்தினை பெரு மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தமிழ்ச்சுடர்**
**மஹா தர்மகுமார குருக்கள்**
தலைவர்,
மன்னார் தமிழ்ச்சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் கவிஞனுக்கோர் வாழ்த்து

ஈர நிலத்தை எதிர்பார்த்து என்னும் கவிதை தொகுப்பை தன்னை ஈன்றெடுத்து உயர வைத்த அன்னைக்காகவும் தன்னை நடமாட வைத்து தன் இயலாமையை போக்குவித்து தன் நலம் பாராது பராமரித்து வரும் தன் மனைவி லீனாவுக்கும் சமர்ப்பணமாக் கியுள்ள அன்புத் தம்பி பெனில்

உறங்கிக் கிடந்த உள்ளங்களைத்தட்டி எழுப்பும் கவிதைகளை எம்முன்னே சமர்ப்பித்துள்ளார்.

கவிதைகள் எழுதுவது எல்லோருக்கும் முடியாத செயல் என்று கருதுவதில் தப்போ தெரியாது. கவிதை எழுதுபவர்கள் தம் சிந்தனைக்கும் வாழும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு எழுதுவது வழக்கம். ஆனால் தம்பி பெனிலை பார்க்கும் போது எம் மக்கள் பட்ட இன்னல்கள் பற்றியும் உணர்வுடன் எழுதுவதில் வல்லவராக இருக்கின்றார். "நெருப்பு சுட்டால் தான் அதன் வேதனை தெரியும்" இவரும் அதில்கண்ட வேதனை தான் அவரை " வலியின் விம்பங்கள்" என்ற கவிதை நூலும் அதைதத் தொடர்ந்து எழுதிய "ஈரநிலத்தை எதிர்பார்த்து" என்ற நூலும் வேறுபட்ட நிலைப்பாட்டையே கொண்டுள்ளது.

எம் சுய நிர்ணயம் சுகமான வாழ்வு வளமிக்க எதிர்காலம் எம்மை நோக்கி விரைவில் வருமா..? என்ற ஏக்கத்துடன் எம் மக்கள் பட்ட பட்டுக்கொண்டிருக்கும் துன்பம் எல்லாவற்றையும் இதற்கு விடிவு வருமா..? என்ற ஏக்கம் எம் மனதை தொடுவதாக உள்ளது.

தனக்கு இயலாது என்ற எண்ணத்தை குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு துயருறும் எம் மக்களுக்கு கவிதைகள் மூலமாவது அவர்களின் இதயத்தில் மன நிறைவைத் தரக்கூடிய எண்ணங்களை வித்திட்டுள்ளார்.

அன்புத்தம்பி பெனில் அவர்களை மன நிறைவோடு வாழ்த்துவதோடு எல்லா வகையிலும் தன்னைப் பாதுகாத்து பக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையாக இருக்கும் துணைவியார் லீனாவையும் வாழ்த்தி அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டுமென இறைவனை வேண்டி ஆசி கூற என் மனம் துடிக்கின்றது. இந்த மகனுக்கும், பெனில் லீனாவுக்கும் எனது சிறப்பான வாழ்த்துக்கள் வாழ்க வளமுடன்.

ஈர நிலத்தை எதிர்பார்த்து என்ற கவிதை தொகுப்பிற்கு வாழ்த்துக்கூற எனக்கு சந்தர்ப்பம் வழங்கிய கவிஞர் பெனில் லீனா குடும்பத்தாருக்கு மன நிறைவான நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

சித்த வைத்தியர்
**சே.செல்வ மகேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

கடந்த பல தசாப்தங்களாக எமது மண்ணில் நடைபெற்ற விடுதலை போர் வஞ்சகத்தினாலும், சூழ்ச்சியினாலும், பல வல்லாதிக்க நாடுகளின் உதவியுடனும், மழுங்கடிக்கப்பட்டன. சமாதானத் திற்கான போர் என்ற போர்வையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் இன அழிப்பு போரை திட்டமிட்ட வகையில் செய்ய முடித்தது. ஆயதப்போர் முடிவுற்றாலும், ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட இன அழிப்பு செயற்பாடு சத்தமில்லாமல் இரத்தம் இல்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆயிரக்கணக்கான தமிழர் தேசமெங்கும் புத்த விகாரைகளும், சிலைகளும், உருவாக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய போரின் பின்னரான காலப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்து கவிஞர் மன்னார் பெனில் தனது கவிதைத் தொகுப்பில் ஈரநிலத்தை எதிர்பார்த்து என்ற நூலில் தெளிவாக, துணிவாக , உண்மையாக உள்ளத்து உணர்வுடன் வெளிப்படுத் தியிருக்கின்றார். அவருடைய துணிவையும், முயற்சியையும் மனதார பாராட்டுகின்றேன். இவருடைய கவிதைப் புத்தகமானது போரின்போதும், போரின் பின்னருமான காலப்பகுதியில் நடை பெறும் மனித உரிமைமீறல்களை வெளிச்சம் போட்டுக்காட்டு வதோடு எதிர்கால சந்ததியினருக்கான ஓர் ஆவணமாகவும் உள்ளது.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்" என்ற வள்ளுவரின் வார்த்தைக்கு கவிஞர் மன்னார் பெனிலின் ஈர நிலத்தை எதிர்பார்த்து என்ற கவிதைப் புத்தகம் உயிர் கொடுக்கின்றது.

இம்மாபெரும் முயற்சியை மனதார பாராட்டி நிற்பதொடு இக்கவி தைப் புத்தகம் வெளியிடப்பட்டு பல மக்கள் பயன்பட எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டுவதோடு கவிஞர் பெனில் அவர்களையும், துணைநிற்கும் அவரது மனைவியரையும் தொடர்ந்து ஆசீர்வதித்து உடல் உள ஆன்மீக நலன்களை பொழிய வேண்டுகின்றேன்.

**அருட்பணி இம்மானுவேல் செபமாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

**என் இனிய உறவுகளுக்கு மகிழ்வான வணக்கங்கள்.....**

"வலியின் விம்பங்கள்" ஊடாக உங்களை சந்தித்த நானின்று" ஈர நிலத்தை எதிர்பார்த்து" காத்திருக்கும் எண்ணற்ற எம் தமிழின உறவுகளின் அங்கலாய்ப்புகளின் ஏக்கங்கள் கண்ணீர்கள் கவலைகள் குருதி படிந்த நிமிடங்கள் என்பவற்றை உணர்வின் கருவாகக் கொண்டு இந்த நிலத்தில் விதைத்துள்ளேன்.

எதிர்பார்ப்பு என்பது எல்லா உயிர்களுக்கும் அதனதன் தன்மைக்கு ஏற்றது போல மாறுபட்டிருக்கும். ஈழ நிலத்தில் வாழும் ஒவ்வொரு உயிருக்கும் ஒரே உணர்வுதான் இருக்க முடியும். அதுதான் ஈழ நிலம் எப்போது ஈரமாகும் என்பதே.....

புதைக்கப்படுவது விதைகளல்ல விதைக்கப்படுவதே விதைகள் அதனால்தான் உணர்வுகளின் வெளிப்பாடாய் குறியீடுகளின் மூலம் இந்த நிலத்தில் என் எண்ண விதைகளை விதைத்துள்ளேன் என்றோ ஒரு நாள் எங்கள் நிலமும் ஈரமாகும் என்ற நம்பிக்கையுடன்......

என்றென்றும் சினேகமுடன்
**பி.பெனில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| இல. | விபரம் | பக்க இல. |
|---|---|---|
| 01. | மணிமுடியின் கெடுபிடி | 01 |
| 02. | உயிரடங்கு முன் | 04 |
| 03. | வாராயோ வல்லோனே | 05 |
| 04. | ஈரநிலத்தை எதிர்பார்த்து | 07 |
| 05. | கைதாகும் எலும்புக்கூடுகள் | 09 |
| 06. | தேன் வதை திருடிய வஞ்சகன் | 11 |
| 07. | இழந்தும் இருப்பதும் | 14 |
| 08. | வேசம்போடும் மோசக்காரர் | 15 |
| 09. | விடுதலை விதைகள் | 17 |
| 10. | உரிமைக்குரல் | 19 |
| 11. | மம(போ) தையில் | 21 |
| 12. | எழுதுகோலின் எத்தனிப்பு | 22 |
| 13. | வீரகாவியம் | 24 |
| 14. | இன அழிப்பு | 25 |
| 15. | கொஞ்சக்காலமதான் | 26 |
| 16. | அன்பே சிவம் | 28 |
| 17. | வலிகளும் வடுக்களும் | 29 |
| 18. | இதுதான் உன் நீதியா.....? | 30 |
| 19. | களையிழந்த நிலம் | 31 |
| 20. | பொய்யாய் சொன்ன பொய் | 32 |
| 21. | மீண்டும் வருமா...? | 33 |
| 22. | தூரப்பயணம் துயரத்தோடே | 35 |
| 23. | சூழ்ச்சியின் வடிவம் இது | 36 |
| 24. | நல்ல செய்தி | 38 |
| 25. | கருத்தாயிருந்து காவல் செய் | 39 |
| 26. | சிறையில் வாடும் காணி | 40 |
| 27. | அவதாரம் | 41 |
| 28. | பீதியுடன் பாதி நாட்கள் | 43 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 29. | நானும் நாயானேன் | 44 |
| 30. | மலரோடு மனது | 47 |
| 31. | மறவர் குல மாணிக்கம் | 48 |
| 32. | சூதுகவ்வும் | 50 |
| 33. | வரியெழுதிய தீர்ப்பு | 53 |
| 34. | தூங்கா தாலாட்டு | 54 |
| 35. | எதுவும் நடக்கலாம் | 57 |
| 36. | காலம் மாறிப்போச்சு | 59 |
| 37. | பாத்திரப்பிச்சை | 59 |
| 38. | முகமூடி | 60 |
| 39. | ஆறாயத்துயரம் | 60 |
| 40 | என் எழுதுகோல் | 61 |
| 41. | ஒத்திகை | 61 |
| 42. | பரிதாபம் | 62 |
| 43. | நிதர்சனம் | 62 |
| 44. | அழியமுன்னே அறிந்துகொள் | 63 |
| 45. | தவிக்கும் தாயுள்ளம் | 66 |
| 46. | புதுயுகத்திற்காய் | 67 |
| | நன்றியுரை | 68 |


KOHA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிமுடியின் கெடுபிடி

வெட்டுக்கிளிகளை
வேட்டையாட
ஊருக்குள் யாரோ
அத்துமீறி
புகுந்து விட்டதாய்
பொய் சொல்லி
சிட்டுக்குருவிகளை
குறிவைக்கின்றன
வெட்டுக்கிளிகள்.

பார்க்கும்
இடமெல்லாம்
பயங்கரம்
கண்ணில்
பட்டவரெல்லாம்
பயங்கரவாதியாம்
சிறைக்கம்பிகள்
இல்லாமலே வீட்டுக்குள்
சிறைப்பட்டுள்ளன
சிட்டுக்குருவிகள்
அப்போதும்
விட்டுவைக்கவில்லை
வெட்டுக்கிளிகள்

வெட்டைக்கு அழைத்து
விசாரித்து விசாரித்து
களைபிடுங்குவதாய்
பொய் சொல்லி - எம்
பயிர்களை நாசம்
செய்கின்றன வெட்டுக்கிளிகள்

பொதுசனநூலகம்
10 JUN 2020
மா ந
யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சடிக்கப்பட்ட
புகைப்பட பிரதிகள்
ஆங்காங்கே காட்சிக்கு
ஒட்டப்படுகின்றன
சன்மானம் உண்டாம்
காட்டித்தரவாம்
இல்லாத களைக்கு
இலட்சம் பலவாம்
என்ன வேடிக்கை

இருந்திருந்தால்
சல்லடை
போட்டுத்தடவும்
வெட்டுக்கிளிகள்
பிடித்திருக்குமே
பொய்க்குமேல் பொய்
கொடுமைக்குமேல்
கொடுமை

இது எல்லாம் தெரிந்தும்
வெட்டுக்கிளிக்காய்
இரட்டை வேடம்
போடுகிறது
அண்டை நாட்டு
கொண்டங்கினர்
சாட்சியங்களெனும்
நூல்கொண்டு
மாநாடு கூடி
நீதி கேட்கிறது
மனிதாபிமானமிக்க
அயல்நாட்டுப்பட்சிகள்

பொது நூலகம்
10 JUN 2020
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணியில்
சிக்கவிடாது
வாக்கெடுப்பில்
வெட்டுக்கிளிக்கு
சார்பாய்
கொடிபிடித்து
எமக்கு சதி செய்கின்றன
மானங்கெட்ட
மசுக்குட்டிகள்

நீதி உறைந்து
போவதில்லை
பொங்கியெழுந்தால்
அநீதி நிலை
நிற்கப்போவதுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரடங்கு முன்

நெஞ்சத்தில் வலி
நெரிஞ்சிமுள்ளாய்
தினம் தினம் எமை
ரணப்படுத்துகின்றது
காயத்தில்
குருதி வழிந்து
வடுக்களாய்
உறைந்து
போன இடங்களை
கண்ணீர் நனைக்க
இரத்த வாடை
மோப்பம்பிடித்து
இலையான்களும்
எறும்புகளும்
எம் தேகத்தில்
தேடி வந்து
மொய்க்கிறன
இன்றோ நாளையோ
எம் தேகம்
ஊர்வனவற்றுக்கு
உணவாகக்கூடும்
அதற்குமுன்
வந்துவிடுமா
வெள்ளைப்புறா....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாராயோ வல்லோனே

பிஞ்சுகளை
பஞ்சணைக்கிழுத்து
வஞ்சனை
செய்வோரை
வதம் செய்ய
வரவேண்டும் நீ வரவேண்டும்
கையில் ஆயுதமேந்தும்
வல்லோனே

ஈழத்தமிழர்களை
இரையாய் உண்ணும்
ஈன மாந்தரை
இரக்கமின்றி வதைத்திட
வரவேண்டும் நீ
வரவேண்டும்
கையில் ஆயுதமேந்தும்
வல்லோனே

காக்க வேண்டிய
வேலியே
பயிர்களை
கசக்கி பிழியும்
இழிச்செயல்
செய்வோரை
இல்லாது ஒழித்திட
வரவேண்டும் நீ
வரவேண்டும்
கையில் ஆயுதமேந்தும்
வல்லோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி செல்லும்
பிள்ளைகளை
ஆசானென்ற
போர்வையிலே
ஆபாசம் புரிந்து
அநியாயம் செய்யும்
பாதகர்களை
வதம் செய்ய
வரவேண்டும் நீ
வரவேண்டும்
கையில் ஆயுதமேந்தும்
வல்லோனே

காமுகர்களை அழித்து
எம் கண்மணிகளை
நலமுடன் வாழவைக்க
வரவேண்டும் நீ
வரவேண்டும்
கையில் ஆயுதமேந்தும்
வல்லோனே.......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர நிலத்தை எதிர்பார்த்து

வானம் பார்த்திருக்கும்
நிலத்தைப்போல
உன் வரவுக்காய்
காத்திருக்கும் மரங்கள்
வெயிலின் கொடுமை
தாண்டவமாடுகிறது
முடியவில்லை
தாங்கமுடியவில்லை

(பமு)ல மரங்கள்
கருகி விட்டன
இன்னும் சில மரங்கள்
கிளை இழந்து
களையிழந்து
நடை பிணமாய்
வாடுகின்றன

துளிர்விடும் எம்
நிலை கண்டு
கிள்ளுகின்றன
கொடூர கரங்கள்
கருவில் இருப்பதை
அறிந்து விட்டால்
ரசாயன பதார்த்தமும்
ஊற்றுகிறார்கள்
தறிப்பதும் முறிப்பதும்
பிடுங்கி எடுப்பதுமாய்
நாளுக்கு நாள்
இருந்த இடம் தெரியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியாக்கப் படுகின்றோம்
இப்படியே போனால்
இத்தோடு எம் சந்ததி
முடிந்து விடுமோ என்று
எண்ணி எண்ணியே
ஏக்கத்தோடு
வாழுகின்றோம்

நீ வரா விட்டால்
எம்மைத்தேடிவரும்
வெளிநாட்டில் இருக்கும்
எம் வித்துக்களுக்கு
நிலமும் இருக்காது
நாம் இருந்த
தடயமும் இருக்காது
இழந்தவை போதும்
இருப்பவை துளிர்விட
விரைந்துவா
வான்மழையே
விரைந்து வா......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதாகும் எலும்புக்கூடுகள்

வேலையில்லா
வீணர்கள்
தோண்டுகிறார்கள்
எம்மவர்களில் எச்சங்களை


நாளுக்கு நாள்
இரண்டு மூன்று
நான்கென்று
மண்டை ஓடுகளும்
எலும்புக்கூடுகளும்
இருபத்தைந்து நாளில்
அறுபத்தைந்தைத்
தாண்டி விட்டதாம்

உயிரோடு
இருக்கும் போது
பாதுகாக்காதவர்கள்
எச்சங்களாய்
மிச்சமிருப்பதை
பாதுப்பாய்வு செய்து
பாதுகாப்பாக
பெட்டிகளில்
அடுக்குகிறார்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண்டி எடுப்பதை
விட்டு விட்டு
தோண்டி எடுத்த
எச்சங்கள்
யாருடைய சதியால்
வீழ்ந்ததென்று
பின்புலத்தை தோண்டுங்கள்
ஏதாவது வெளிவருகிறதா
எனப்பார்ப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் வதை திருடிய வஞ்சகன்

ஒன்று இரண்டு
தேனீக்கள்
ஒரு மரக்கிளையினிலே
சின்னதாய் ஒரு
கூட்டை அமைத்தன
இடைவிடாத
உழைப்பின் பயனாய்
பலநூறு தேனீக்கள்
அதனோடு
தம்மை இணைத்தன
பார்ப்பதற்கு
அழகோ அழகுதான்
கொட்டும் விசம்
அதனிடம்
இல்லாமலில்லை
அடுத்தவர் தமக்குத்
தீங்கு செய்யாதவரை
சாந்தமாகவே இருக்கும்

அடுத்தவர
சொத்தில் பேராசை
கொண்ட கரடிக்கு
இந்தத் தேன்கூட்டின் மேல்
ஒரு கண் இருந்தது
சிறு தேனீ தன்னை
என்னசெய்திட
முடியுமென்ற
அசட்டு நினைப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்கூட்டில்
கையை விட்டது
சிறு தேனீக்கள்
கொட்டி
பெரும் வலியைய்க்
கொடுத்து
விரட்டி அடித்தன
வலி தீர்ந்ததும்
எச்சில் ஊற
மீண்டும் மீண்டும்
முயற்சித்து
தேன்கூட்டை
நெருங்க முடியாமல்
பல கரடிகள்
இருந்த இடம்
தெரியாமல் போய்விட்டன

அதன் வழிவந்த
பண்டா கரடி
தன் தலைமுறையிலாவது
இந்தத் தேன் கூட்டைப்
பிய்த்தெறிய
வேண்டுமென்ற வெறியில்
வேட்னோடு கைகோர்த்தது

வில்லும் அம்பும்
அதனிடம் பயனற்றுப்
போனதினால்
நச்சு வாயுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் நாலாபுறமும் விசிறி
தேனீக்களை சிதறிடிக்க
பல தேனீக்கள்
உடல்கருகி மடிந்தன
இன்னும் சில தேனீக்கள்
சுவாசிக்க முடியாமல்
மயங்கி விழுந்து
வேதனையில் துடித்தன

மயங்கி விழுந்த
தேனீக்களை
பண்டாகரடி
தன் கொடிய கால்களால்
மித்துக் கொன்றுவிட்டு
தேன் வதைகளை
வேடனுடன்
பங்கிட்டுக் கொண்டது
தேனைத்தின்ற கரடி
அத்தோடு
நின்று விடவில்லை
அந்த மரத்தடியிலேயே
இன்று தங்கி விட்டது.

131800CC

KOHA
JPL

276708




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்ததும் இருப்பதும்

மெல்லிய
காற்று
மேனியை வருட
மரத்தடி நிழலில்
படுத்துறங்கிய
இன்ப நினைவினை
இரை மீட்டுகின்றேன்
தறப்பாள்
கொட்டிலுக்குள்
வியர்வை துளிகளில்
நனைந்தபடி

131800
KOHA JPL





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேசம் போடும் மோசக்காரர்

என்றுமே தம்
ஆட்சிக்கதிரையை
தமதாக்கிக்கொள்ள
தமிழ்நாட்டில்
ஈழத்தமிழருக்குக்
குரல்கொடுப்பதாய்
வாய் பிளக்கின்றன
சில மாரித்தவக்கைகள்

எமக்காக
உண்ணா விரதம்
இருக்கின்றன
வயிறு நிறைய
உண்ட முதலைகள்
தமிழுக்காய்
ஈழத்தமிழருக்காய்
தமிழ்நாட்டில்
தீக்குளித்தவர்களின்
கடைசி ஊர்வலத்தில்
கட்சிக்கொடிபிடித்து
குளிர்காய்கின்றன
பல கோட்டான்கள்

அடுத்த தன்
ஆட்சிப் பீடத்திற்கு
எம் அவலச்சாவை
கதையாய் எழுதி
மத்திய அரசுக்கு
மனுவாய் அனுப்புகிறது
கண்ணாடிப்பூதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்புத்துண்டோடு
சினேகம் கொண்டு
இத்தனைக்கும்
காரணமாயிருந்த
தலைப்பாகை கரம்பாம்பூச்சி
மனுவை தணிக்கை செய்து
மூடிமறைத்தது
எங்கே தன் தலையும்
பொறியில் மாட்டிவிடுமோ
என்கிற அச்சத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை விதைகள்

இருந்த இடம்
தெரியவில்லை
இருந்தும் நாம்
கடந்து போகையில்
நின்று தலைவணங்க
மறந்ததில்லை

அன்று
மாலைபோட்டு
மரியாதை
செய்த எமக்கு
இன்று அந்த
சுதந்திரம் இல்லை
இருந்தும்
எருக்கலை மரங்கள்
உங்கள் மீது
தினந்தோறும்
மலர் தூவ
மறந்ததில்லை

நாங்கள்
ஊரைவிட்டு
ஓடினோம்
எம் ஊருக்கு
அஞ்சி
அன்னிய தேசமதில்
அகதிகளாக
நீங்கள் மட்டும்
தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணைவிட்டு
விலகாது
மண்ணோடு
வாழுகிறீர்கள்
மண்ணுக்காய்
வாழுகிறீர்கள்

வீரம் விளை
நில மண்
அள்ளி எடுத்தாலும்
அழிந்து போகாமண்
இடித்துத் தட்டினாலும்
இறவாத எம்
உறவுகள்
துயில் கொள்ளும்
எம் தாய்மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமைக்குரல்

எம் தேசத்திலிருந்து
கடல்கடந்து
போய் வாழும்
எம் கரங்களே
வரங்களைச்
சாபமாய்ச் சுமக்கும்
எம் நிலைகண்டு
வருந்த வேண்டாம்
விடியலைக் காணாத
விண்மீன்களில்லை
நாங்கள்
வீரத்தமிழ் மறவர்கள்
நாங்கள் மடிந்திட்டால்
எம் சரித்திரம்
முடிந்திடப்போவதில்லை


எம்மிடமிருந்து
நிலையாய் எதையும்
தட்டிப்பறித்திட
முடியாது

மண்ணை
முட்டித்தள்ளி
வெளிவரும்
முளையைப்போல்
எமக்கானவற்றைத்
தட்டிக்கேட்க
பின்னிற்க வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்திட ஆயிரம்
கரங்கள் வரட்டும்
தமிழரின் கரங்களின்
தனித்துவத்தை
இத்தரணி அறியட்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மம(போ)தையில்

கள்ளைக்குடித்த
கருவண்டு
சும்மாயிராமல்
சிட்டுக்குருவியிடம்
சில்மிசம்
செய்யத்துணிந்தது
எதிர்பாராத
தாக்குதலால்
நிலைகுலைந்த
கருவண்டு
போதை தெளிந்து
போதிமரத்தில்
துளையிட்டு
உள்ளிருந்து
ஞானத்தை
வேண்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுகோலின் எத்தனிப்பு

இப்படித்தான்
எழுதவேண்டுமென
எனக்கு யாரும்
சொல்லித்தரவும்
இல்லை
எப்படியும் எழுதலாமென
நான் நினைத்ததும்
இல்லை.
மெழுகுவர்த்திபோல்
இருளை விரட்ட
முடியாவிட்டாலும்
இருள்படிந்த கொடூர
முகங்களைப் பற்றி
உங்களிடம் சின்னதாய்
உணர்வை
விதைக்கலாமென
வந்துள்ளேன்
அவசரகாலச்சட்டம்
பயங்கரவாதச் சட்டமென்று
காலத்துக்காலம்
சட்டங்களை எழுதும்
பேனாக்களைப் போல்
நானில்லை
நான் தமிழன் கையில்
தவழும் செல்லப்பிள்ளை.

மன்னார்
**பெனில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிச்
சொல்லுவதாலும்
தமிழன் கையில்
தவழ்ந்தாலும்
அந்தச் சட்டங்களிலே
ஒன்றை வைத்து
என்னை
சிறைப்பிடிக்கலாம்
நான் தவழ்ந்த
கரங்களை
சிதைத்தாலும்
சிதைக்கலாம்

சாட்சியங்களை
அழிப்பதனால்
நடந்தவை
இல்லையென்றதாகி விடாது
குரல் வளைகளை
நெரிப்பதனால்
உண்மைகள்
ஊமைகளாகிவிடாது.

ஒரு நாள் விடிவு வரும்
அப்பொது நீ செய்த
கொடுமைகளுக்கான
முடிவை எழுதும்
ஒர நல்ல பேனா
அதுவரை...........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரகாவியம்

கொத்துக்
குண்டுகளுக்கிடையே
என் உயிர்
சிக்கித்தவித்த போது
பதுங்கு
குழியாயிருந்து எனை
பாதுகாத்தவளே
படைவீரர் உனை
பாதகம்
செய்த போது
மீட்கமுடியா
பாவியாகி
போனேனே நான்.
உனை
மீட்கப்போராடி
சன்னம் என்னை
சின்னாபின்ன
மாக்கியிருந்தால்
காற்றோடு கலந்து
உன்னோடு
வந்திருப்பேன்
என் ஆற்றாமை
கண்டு
அவனி என்னை
தூற்றுகிறது.
நீ போராடித்தோற்று
வீர காவியமானதினால்
இன்று தரணி
உந்தன்
பரணி பாடுகிறது.

மன்னார்
பெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன அழிப்பு

பன்றிகள்
கிளறுகின்றன
எம் வித்துக்கள்
விதைக்கப்பட்ட
மண்ணை
வேரூன்ற முடியாமல்
தடுமாறுகிறது எம்
பச்சிலை மரங்கள்



276708



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஞ்சக்காலம் தான்

பல்லியும்
ஓணானும்
உல்லாசமாய்
உலா வருது
வீதியிலே
விடலைகள்
படலைக்குள்

தப்பித்தவறி
எட்டிப்பார்த்துவிட்டால்
வெள்ளைச் சுவரைக்
களங்கம் பண்ண
தெருநாய்கள்
காத்திருக்கின்றன.

கவரிமான்
கூட்டத்தை
கடித்துப்
புசித்து விட்டதாய்
குள்ள நரிக்
கூட்டங்களின் பேச்சு
அச்சில்
அரங்கேறுகிறது
அங்காடிக்
கழுதைக்கு
காலை
உணவுக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுகிடம்
ஆதாயம் தேடி
அடைக்கலம் புகுந்தன
சில பச்சோந்திகள்.

மழை நீரைக்
காணாத மண்ணிலே
கற்றாளையும்
கள்ளிச் செடியும்
வேரூன்றப் பார்க்கின்றன.

ஒரு நாள் விடியும்
எம்மவரின்
குருதி அமில
மழையெனப்
பொழியும்
அன்றோடு
கள்ளிச்செடியும்
கற்றாளையும்
இல்லாதொழிந்து போகும்.

குள்ள நரிக்கூட்டம்
ஊரைவிட்டு
ஊளையிட்டோடும்

10 JUN 2020


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்

பகையெனும்
தீயை மூட்டி
சாதிமத
வேற்றுமை காட்டி
குளிர்காய
நினைப்பவர்
நெஞ்சந்தனில்
பாசமென்ற
பனித்துளியை
தெளித்துவிட்டால்
கலங்கிய நெஞ்சம்
தெளிந்து விடும்
கருணையுள்ளம்
பிறந்துவிடும்.

10 JUN 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகளும் வடுக்களும்

காட்டுப்
புதர்களின் நடுவே
வேட்டு
ஓசையை விட
வேகமாக
விரைந்த
கால்களில்
குத்திய
முட்களுக்குத்தான்
எத்தனை இரக்கம்
குத்திய
இடங்களில்
வடுக்களே அன்றி
வலிகள் இல்லை.

ஓடிய பாதங்கள்
ஓய்வெடுக்கும்
இந்த முட்கம்பி
வேலிக்குள்ளே
வடுக்கள் இல்லை
வலிகள் தான்
எத்தனை எத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் உன் நீதியா...?

போர்க்களத்தில்
பிடிப்பட்டடோரெல்லாம்
கைதியாய்
சிறைக்கூடங்களில்
அடைக்கப்படல் - இது
யுத்த நியதி

ஆடை களைந்து
கண்ணைக்கட்டி
கையைக் கட்டி
ஈவு இரக்கமின்றி
ரவைகளால்
உடலை ரணமாக்கி
உயிர் பறிப்பது
என்ன நியதி....?
போட்டியில்
தோற்றவன் பலவீனன்
வென்றவன் பலசாலி - இது
போட்டியின் நியதி....?
வீரனை வீழ்த்த
விழுந்தான் கோழை
பல நாட்டின் காலடியில்
இங்கே வென்றவன் வீரனாம்
தோற்றவன் கோழையாம்
இது என்ன நியதி....?

மன்னார்
**பெனில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களையிழந்த நிலம்

காக்கைக்கு
குயில்குஞ்சை
தெரியாது
அது கூவாதவரை.

காட்டிக்கொடுக்கும்
கயவன் இல்லையெனில்
என் தேசம் அறியாது
அந்நியப் படைகளின்
காலடிகளை.

என் தேசத்து
நிலத்தைக்கூட
வெறித்துப் பார்க்கும்
வேற்றுக் கண்களுக்கு
இரையாகுன்றன
எம் கவரிமான்களின்
கன்னிமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாய் சொன்ன பொய்

குழந்தையாய்
இருந்த போது
நிலாவை
பிடித்து தருவதாய்
அம்மா சொன்ன
பொய்யை நம்பி
நிலாச்சோறு உண்டேன்
இன்று அதே
பொய்யைச் சொல்லி
என்னவள் உள்ளத்தில்
இடம்பிடித்தேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் வருமா

அழகிய
சின்னக்குடிசை
சில கிடுகுகளோடு
பனையோலையும் கூட
அரைச்சுவர்
களிமண்ணால்
திறந்தே
கிடக்கும்
சாக்குப்படல்
வசிப்பவர்கள்
உள்ளம்போல
வெளியில் இருந்து
வெற்றிலை
இடிக்கும்
பல்லுப்போன
பாட்டியுடன்
படுத்திருங்கள்
பாசமான நாய்
பொட்டல் நிலத்தில்
காயப்போட்ட செத்தல்
மிளகாய்களை கிளறும்
கோழிகள்

கட்டை இடித்துக்
கட்டிய பசுவில்
துள்ளி விளையாடி
மகிழ்ந்து பால்குடிக்கும்
பசுக்கன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமரத்துக்
கிளையினிலே
மாம்பழம் தேடும்
அணில்களுடன் கிளிகளும்
அப்பப்போ வந்துபோகும்
இசைபாடும் குயில்களும்
வளவைச்சுற்றி
வேலியாய்
வளர்ந்திருக்கும்
பூவரச இலைபறித்து
பீப்பி ஊதும்
சிறுவர்களும்
சீமைக்கிழுகு வெட்டி
ஆட்டுக்குக் கொடுக்கும்
தாத்தாவும்
பலா மரத்து நிழலிலே
சுளை பிரித்து சுவைத்திட்ட
இன்பநாட்களும்
இன்னுமொரு தரம் வருமா
எம்மவர் வாழ்விலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரப்பயணம் துயரத்தோடே

வன்னிமண்ணின்
மரங்களெல்லாம்
அழுகின்றன
என் தேசத்து
உறவுகளுக்கு
நிழல்கொடுக்க
இப்போது தன்னிடம்
கிளையேதும்
இல்லையென்றெண்ணி

அங்கங்களை இழந்து
இரத்தக் கறையோடு
கயவன் காலடிபோகும்
கண்களிலும் வேதனை

நாங்கள்
ஊஞ்சலாடிட கிளைதந்து கூடியமர்ந்து
கதைபேசிட நிழல்தந்து
நாம் உண்டு மகிழ்ந்திட
பழவகை பல தந்திட்ட
மரங்களெல்லாம்
படையினரின்
பாரிய தாக்குதலில்
எம்மைப்போல்
நிலைகுலைந்து
நிற்கின்றதே என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ்ச்சியின் வழவம் இது

மணி இலையான்கள்
தமிழர் வீட்டுக்கதவை
தட்டுகிறது
நல்லமணியோடு
மனையும்
தருகின்றோமென்று

தப்பித்தவறியெனும்
தாழிட்டகதவை
திறந்து விடாதீர்கள்
என் தங்கைகளே

பொன்வண்டுகளாய்
வாழும் உங்களை
போதைப்பொருளாய்
சிறைப்பிடிக்கவே
இந்தமாயவலை

மதிகெட்டு மயங்கி விட்டால்
நாளும் பொழுதும்
நாற்றம் பிடிக்க
கற்றுத்தருவார்கள்
பயிற்சியென்ற
போர்வையிலே

மன்னார்
பெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிச்சம்
கொஞ்சம் மயங்கிவிட்டால்
உங்கள் போர்வைக்குள்ளே
மோப்பம் பிடிப்பார்கள்
நம்பிவிடாதீர்கள்
என் தங்கைகளே
தமிழ் மங்கையரே

சில்லறை பணத்தோடு
குடிசைக்குள் சீவியம்
நடத்தும் வழிவந்த
தமிழ் கற்புக்கரசிகள்
நாம் என்பதனை
இந்நானிலம் அறியட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல செய்தி

வருங்காலம்
சிறப்பதாய்
வாசலோர
குடு குடுப்பைகாரன்
சொல்ல
அழுக்கில்லா
புடவை ஒன்றை
அம்மா அன்பளிப்பாய்
கொடுக்க
புன்னகையோடு
வீட்டுக்கு புறப்பட்ட
குடு குடுப்பைக்காரன்
நல்ல காலம் பிறந்ததென்று
மனைவியிடம் நீட்டினான்
அம்மா கொடுத்த புடவையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தாயிருந்து காவல் செய்

மட்டைவேலியில்
கட்டியிருக்கும்
கிடுகோலையில்
குடியேறிய
கறையான் வீடுகள்
நாளுக்கு நாள்
வளர்ந்துகொண்டே
போகிறது

மட்டைகளின் நிலையோ
மா பரிதாபம்
இரு ஓரங்களும்
ஒல்லியாகித் தன்
உறுதியை இழக்கின்றது
கிடுகோலையில்
இப்போதெல்லாம்
ஈக்கில் மட்டுமே
காப்பரண்களைப் போல்
காட்சி தருகிறது.

கவனிப்பாரில்லையோ
கவனிக்கவில்லையோ
இந்த நிலை நீடித்தால்
நீ கட்டியிருக்கும்
வேலிக்குள்ளிருக்கும் வீடு
கயவர்களால்
சூறையாடப்படும்
காட்டெருமைகள் உன்
வீட்டுத்தோட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசம் செய்யும்
நீ வழித்துக்கொண்டால்
உன் சொத்து
பழைத்துக்கொள்ளும்
கறையான் தென்பட்டால்
தடியெடுத்து தட்டு
மீண்டும் படையெடுத்தால்.
கழிவொயில் கொண்டு
அதற்கு அடியோடு சமாதி கட்டு

## சிறையில் வாடும் காணி

ஏர் பூட்ட
மாடு இருக்கு
காணி பூமி
அதுவும் இருக்கு
உழுவதற்கு
ஆளும் இருக்கு
விதைநெல்லை
வீசியெறிந்தால்
பலனை அள்ளித்தர
விளை நிலம்
காத்திருக்கு
இத்தனைக்கும்
தடையாக கோமாண்டோ
கம்பி வேலியிருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவதாரம்

கந்தகக்காற்றே
கரும்புகையே
எங்களின் உயிர்
போனது எங்கே....?

எங்களின்
தேச நேச நிலமே
ஊன் உருகி கரைந்தே
உருக்குலைந்த எங்களின்
எலும்புக் கூடுகள்
தானெங்கே....?

உயிர் பிரிந்த நேரம்
கூடியிருந்து
குமுறி அழுத
உறவுகளெங்கே...?
குடியிருந்த
குடிசைதானெங்கே...?

தஞ்சமென்றே
ஓடிவந்த எம்மை
காக்க முடியா
கடவுள்களின்
கோயில்களெங்கே...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களின்
உணர்வுகளுக்கு
புத்துயிரூட்டி
மாண்ட நாங்கள்
மீண்டு வரப்போகின்றோம்
மீண்டும் வரப்போகின்றோம்
நாங்கள் இழந்தவற்றை
இன்றே நீ தேடித்தா
எங்களின் நேச தேச நிலமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீதியுடன் பாதி நாட்கள்

முட்கம்பி
முகாமிற்குள்ளிலிருந்து
விடுதலையாகி
தம் சொந்த ஊருக்கு
போகப் போவதை எண்ணி
கோழிக் குஞ்சுகளுக்கோ
எல்லையில்லா ஆனந்தம்

தாய்க் கோழிகளுக்கோ
உள்ளப் பதைபதைப்பு
இங்கு இருந்த காவல்
அங்கு தம் குஞ்சுகளுக்கு
இருக்காதே என்றெண்ணி
காரணம் கூட்டுக்குள்ளிருந்தால்
குறிவைக்க முடியாதே என்று
வெளியில் விடும் வேட்டை
மிருகங்களை நினைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் நாயானேன்

கழுகு ஒன்று
வருவது
கேள்வியுற்று
பல நாய்கள் மாமிசத்தால்
வயிறு நிரப்ப
அதன் வரவுக்காய்
நீண்ட நேரம் காத்திருந்தன

நாளிகை பல
விரைந்த பின்
வந்தது கழுகு
பல வல்லூறுகள்
துணையுடன்
அழுக்கு முகத்தில்
வந்த கழுகுக்கு
அழகான மாலைகள்
அணிவிக்கப்பட்டன.

நாய்களுக்கு
நன்றியுணர்வு அதிகம்
என்பதனால் தான்
என்னவோ
கையெடுத்து
கும்பிட்டும் வரவேற்றன

சிங்கம் புலி
யானை வாழும்
காட்டை
தான் ஆளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கத்தோடு
தன் கடபப்பேச்சை
அரங்கேற்றியது கழுகு

கேட்டுக்கொண்டிருந்த
நாய்கள்
கை தட்டியும்
அதன் வார்த்தைக்கு
வலுசேர்த்தன

விருந்துபசாரத்தில்
தனக்கு வாலாட்டிய
நாங்களுக்கு
தன் ராஜாங்கத்தில்
பதவியெனும்
கொழுத்த இறைச்சித்
துண்டங்களை வீசியது
இன்னும் சில நாய்களுக்கு
சவ்வுத்துண்டங்களை
விட்டெறிந்தது
விடைபெறும்
நேரம் வந்ததும்
ஏனைய நாய்களுக்கு
வாக்கு மட்டுமே
கொடுத்தது
நம்புங்கள் நாளை நான்
செய்வேன் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது
கிடைக்குமென்று
நாக்கை தொங்கப் போட்டுக்
கொண்டிருந்த
நாய்களுக்குள்
நானும் ஒரு நாயாய்
பின்வரிசையில்
என்ன செய்வது
என் ஒட்டிய
வயிற்றுக்கு
சிறு ஆகாரம்
கிடைக்காதா
என்ற சிறு
நம்பிக்கையில் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரோடு மனது

செயற்கையாய்
எதையும்
நேசிக்கவில்லை
எந்தன் வாழ்வு
சேதமாகிடும்
என்றெண்ணி
இயற்கையாய்
நேசித்தேன்
காதலின் வடிவில்
கனவு போனது என்னிதயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறவர் குல மாணிக்கம்

புண்பட்டு நிற்கும்
வெண்புறாக்கள்
நாமாவோம்

இனவெறியர் தரும்
புதுப்பட்டு
வேண்டாம் நமக்கு

வெடிபட்டு மாண்ட
வீர மறவர்களின்
தாரமல்லவோ நாம்
அவதாரமல்லவோ நாம்

வன்னி நிலம்
ஈன்றெடுத்த
ஈழ மக்கள்
நாமாவோம்


மீளாத்துயரில்
வாடினாலும்
ஈனவர்களின் இரைச்சலுக்கு
பயந்திட மாட்டோம்
அடி பணிந்திட
மாட்டோம்

மன்னார்
பெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டும்
வேண்டாம் எமக்கு
பட்டினி கிடந்தாலும்
பகைவன் தரும்
பணமும்
வேண்டாம் நமக்கு
தமிழ்ப்பண்பாடு
இருக்கு எமக்கு
பாழாய்ப் போவது எதற்கு...?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூது கவ்வும்

காக்கைக்கு
யார்தான்
கற்றுக்
கொடுத்ததோ
இந்தக் கபடபுத்தி
அன்று
வடையைத்
திருடியதோடு
நின்று
விடவில்லை
இன்று
வழிதெரியாது திக்குத்
திசை மாறிநின்ற
வெண் புறாக்களை
குயில்போல் கூவி
வெட்டைக்கு
அழைத்து
வேட்டையாடித்
தன் வெறியைத்
தீர்த்து விட்டது

பாவம்
அப்பாவிப் புறாக்கள்
வெள்ளைக் கொடியென்றால்
விரோதிக்கும்
தெரியுமென்றெண்ணி
தங்கள் கால்களை
முன்னோக்கி நகர்த்தின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து நிமிடம்
ஆகவில்லை
பத்தடி
நகர்வதற்கு முன்
சிறுவனின்
கையிலிருந்த
வடையை
திருடுவது போல்
வெண்புறாக்களின்
உயிர்பறித்து
வெற்றுடலை வீதியிலே
வீசியெறிந்தது காக்கை

நீதி தேவதையின்
கண்ணில்
கறுப்புத்துணி
கட்டியதால் தான் - இந்த
வெள்ளைக்கொடி வழக்கு
இன்னும் கறப்பாகவே இருக்கிறது

நீதிதேவதையின்
தோளில் ஏறி
காக்கை இருந்தால்
எப்படித்தீர்ப்புவரும்
கணகட்டை
அவிழ்த்துவிட்டு
காக்கையை
கூட்டிலேற்றி
வெள்ளைக்கொடிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தம் கேட்டால்
பதில் தெரியாது
முழிக்கும் போதே
கூட்டில் நிற்கும்
காக்கைக்கு
தூக்கு என்பது
உலகறிந்த தீர்ப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரியெழுதிய தீர்ப்பு

வரிகளால்
எழுதுகின்றோம்
பக்கம் பக்கமாய்
எம் வலிகளை

வரியில்லா
வன்னி மண்ணில்
புழுதிகள் கிளம்பிவிட்டன
பூக்களை மாசுபடுத்த

மலரிலே
படிந்துவிட்ட
புழுதிகளால்
மரணங்கள்
மலிந்துவிட்டன

வித்தியாபோன்ற
முத்துக்களை - எம்
சொத்துக்களை
நாசம் செய்ய
கிளம்பி விட்ட
புழுதிகளுக்கு
பச்சை மட்டை பாடத்தை
கற்றுக்கொடுப்போம் வாருங்கள்

மின்கம்பங்களில்
வரியெழுதிய
பாடத்தை மறந்துபோன
மாசுகளை - நீதி
தூசுதட்டுமென
நாம் நினைத்தால்
அது மடமை - நாம்
தூசுதட்ட நினைத்தால்
அது எம் கடமை.

KOHA JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்கா தாலாட்டு

ஆராரோ ஆரிரரோ
தமிழ் மகனே
ஆராரோ ஆராரோ
இனவெறியன்
கதை சொல்வேன் - நீ
அனாதையான கதையும் கூட
இதிலேதான் நான் சொல்வேன்
தூங்கிவிடாதே தமிழ்மகனே
ஆராரோ ஆராரோ

திட்டம் போட்ட
படையெடுப்பு
தீர்ந்திடா இன அழிப்பில்
நாடுகள் பல இணைந்தேதான்
நாசகாரம் புரிந்தனரடா
ஆராரோ ஆராரோ
தமிழ் மகனே தூங்கிடாதே
ஆராரோ ஆராரோ

அம்மாவின் சேலை
கிழித்தனரடா
அம்மணமாய் வீதியில்
போட்டனரடா
ஆராரோ ஆராரோ
தமிழ் மகனே தூங்கிடாதே
ஆராரோ ஆராரோ

பக்கத்து நாட்டு
ஆயுதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பல நாட்டின்
ஒத்துழைப்பும் இணைந்தே
எம்மை துடிதுடிக்க
வதைத்தனரடா
ஆராரோ ஆராரோ
தமிழ் மகனே தூங்கிடாதே
ஆராரோ ஆராரோ

பொது சன நூலகம்
10 JUN 2020
மாநகர சபை
யாழ்ப்பாணம்

சதை கிழிந்து
சாவுக்காய் போராடும்
உன் அண்ணனை
காப்பாற்றும் முயற்சியிலே
அடுத்துவந்த எறிகணையில்
அப்பாவும் உடல்
சிதறிப் போனாரடா
ஆராரோ ஆராரோ
தமிழ் மகனே தூங்கிடாதே
ஆராரோ ஆராரோ

உறவு என்று சொல்லிக்கொள்ள
உயிரைத்தவிர
வேறு இல்லையடா
உயிர் பிரிந்து உறவுகளை

அடக்கம் செய்ய அவகாசம்
கிடைக்கவில்லையடா
ஆராரோ ஆராரோ
தமிழ் மகனே தூங்கிடாதே
ஆராரோ ஆராரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காக்களின் அலறல்
அவலத்தின் ஓலத்தினை
என் காதுகள் கேட்டதடா
கம்பி வேலிக்குள்ளே கயவர்கள்
கன்னிமை சிதைத்தனரடா
ஆராரோ ஆராரோ
தமிழ் மகனே தூங்கிடாதே
ஆராரோ ஆராரோ

செத்துப்பிழைத்த
உறவுகள்
நாம் உனை
தத்தெடுத்துள்ளோமடா
தங்கத்தமிழ் மகனே
தமிழரெம்
தடயம் சொல்ல
தரணியிலே
நீயிருக்கவேண்டுமடா
ஆராரோ ஆராரோ
தமிழன் பெற்ற தலைமகனே
ஆராரோ ஆராரோ

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
10 JUN 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவும் நடக்கலாம்

பருத்த
உடலை சுமந்து
பச்சைப் புற்களை
உண்டகளைப்பில்
பட்டியடியில் படுத்திருந்து
மேல்தாடையும்
கீழ் தாடையும்
மெல்ல அசைத்து
உண்டதை மீண்டும்
அசைபோட்டன
ஆவினங்கள்

ஆகாய மார்க்கமாய்
மோப்பம் பிடித்தே
கொத்துக்குண்டுகள் போல
வந்துகுவிந்த
கருவண்டுகள்
ஆவினத்தை
சுற்றிவட்டமிட்டன

சற்று நேரத்தில்
யுத்தகளமானது அந்த இடம்
மல்யுத்த
வீரர்களைப்போல
கொம்புகளால்
ஒன்றுக்கொன்று
முட்டித்தள்ளியும்
எட்டி உதைத்தும்
மோதிக்கொண்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றவர்கள்
பெலனிழந்து
மண்ணில் சரிய
வென்றவர்கள்
எதையோ எதிர்பார்த்து
ஆவினத்தை அண்டி வந்தன.

சில நிமிடத்தில்
ஆவின் ஆசன வாயிலால்
சாணம் சுடுசாதம் போல
மண்ணில் வந்து
விழுந்து விடவே
வென்ற வண்டுகள்
கிடைத்த விருந்தை
சொந்தம் கொண்டாடி
உருண்டை பிடித்து
உருட்டிக்கொண்டு
ஓட்டமும் நடையுமாய்
களஞ்சியப்படுத்தின
அவரவர் பதுங்குகுழியில்
சற்று நேரத்திலே விருந்து
முடியும் நிலையில்
கடைசி உருண்டைக்காக
கடும் சமர் மூண்ட வேளை
எங்கிருந்தோ வந்த கோழிகள்
கறுத்த வண்டுகளை
துண்டாடிப்போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம் மாறிப்போச்சு

அன்று
குண்டடி பட்டு
குற்றுயிராய்
கிடந்தவர்களை
எல்லாம்
தோளில் சுமந்து
தன்னுயிர்போல
காத்திட்டவன்
இன்று தன்
கூடப்பிறந்தவனை
கத்திமுனையால்
காவுகொண்டான்
ஓரடி நிலத்துக்காக

## பாத்திரப்பிச்சை

தன்
வயிற்றுப்
பசிக்காய்
கையேந்திய
இந்தப் பிஞ்சுக்கு
மாடிவீட்டு மகாராணி
கொடுத்த பிச்சை
இந்த வெற்றுப்பாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகமூடி

துடிக்கின்ற
இதயத்துக்கு
தெரியாது
நடிக்கின்ற
முகத்தினை
அடிக்கடி
மாற்றிக்
கொள்ளாவிட்டால்
போற்றுவாரில்லை
தூற்றுவோரே அதிகம்

## ஆறாத்துயரம்

வருடிச்சென்ற
தென்றல்கூட
தேடிவந்து
செத்துக்கிடக்கிறது
எங்களின் பிணத்தருகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் எழுதுகோல்

வழிதெரியா
வலிக்குள்
விழிமூடி
விழுந்தவேளை
பகலவனாய்
வந்த பாவையவள்
பாருலகில் எனை
பாவலனாய்
மாற்றினாள்
தன் கரம் கொடுத்து
என் கரம் பிடித்து

## ஒத்திகை

வாழ்வில்
பலமுறை
அழுவதற்காக
சிலமுறையேனும்
ஒத்திகை பாருங்கள்
சிரித்து மகிழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிதாபம்

முளையாகும்
முன்னே
என் உணர்வின்
விதைகள்
காலத்தின்
கபடத்தால்
துவையல்
செய்யப்படுகிறது
பலவீணர்கள்
சுவைப்பதற்காய்

## நிதர்சனம்

துயரத்தை
உள்வாங்கும்
இதயத்தைவிட
கன்னங்களை
ஈரப்படுத்தும்
கண்ணீரே
காலத்தின் கண்ணாடி

276708



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியுமுன்னே அறிந்துகொள்

ஆசைகள்
கூடிக்கொண்டே
போகிறது
ஈழ நிலத்துப்
பிள்ளைகளுக்கு
போகிற போக்கில்
விட்டு விட்டால்
பொல்லாப்பில் முடிந்து விடும்
பெரும் துயரம் நேர்ந்துவிடும்
தாய்மண்ணை
நேசித்தவனே
கொஞ்சம் யோசி
சீர்கொண்ட சமுதாயம்
போர் விட்டுப்போன பின்னே
கூறுகெட்டு கிடக்கிறதே
கேடுகெட்ட போதைப்பொருளால்
காட்டு மரங்களைக்கூட
கயவர் கவர்ந்திடாது
கண்ணெனக் காத்தவனே
மதிகெட்டு நீயும்
மடியில் கை வைக்கலாமோ
அடிமடியில் கை வைக்கலாமோ...?
அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வம்
தமிழ் சொன்ன பாடம்
தெய்வப்பிறவி நீ
தெருவில் போகும் பெண்களை
கேலியும் கிண்டலுமாய்
சீண்டுவது யார் சொன்ன பாடம்
சாத்தான் ஓதும் வேதமோ....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தன் வந்து
சத்தம் போட்டாலென்ன
சேற்றை கொண்டுவந்து
சோற்றில் போட்டாலென்ன
அள்ளித்தின்ன
நீயென்ன அந்நியனா....?

முரசொலி கேட்டு
முதுகுப்புறம் காட்டி ஓடும்
எட்டப்பன் வீட்டு மகனா நீ
நீறுபூத்த நெருப்பென
களத்தில் நின்று போராடிய
தமிழன் உன் பெரியப்பனடா

முல்லைக்கொடிக்கு
தேர்கொடுத்த வம்சமடா
பாடுபட்டு உழைக்கும்
வர்க்கமடா
பரதேசி இல்லையடா

நாசியிலே போதையை
சுவாசிக்கும் நீ
வேசியின் மகனல்ல
வேண்டாத தொடர்பால்
விலை போனவன்தான்

விட்டு விட்டு வெளியே வா
வீணர்கள் களிகூர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழா நீ வீதியில் நிற்கலாமோ...?
உனக்கான தனித்துவத்தை
உனக்குச்சொல்ல
இன்னொருவன் வேண்டுமா....?

உன்னால் உன்
உறவுகள் அழுதது போதும்
பொல்லுத்தடியும்
வாள் வெட்டு
பொல்லாத போதைவஸ்தும்
உனக்கு நற்பாதை காட்டாது.
அடங்கா ஆசைகளை
அக்கினியில் பொசுக்கிவிட்டு
யாழ் நகரை மீட்டெடுத்து
பண்பாட்டை நிலைநிறுத்த
ஈழ மகனே இன்றே நீ மனம் மாறிடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிக்கும் தாயுள்ளம்

உழைத்து
தேய்ந்த உன்
செருப்புக்கூட
உன் வீட்டு வாசலில்
நிம்மதியாய்
ஓய்வெடுக்கையில்
இடுப்புவலியெடுத்து
உனைப் பெற்ற நானோ
நடுத்தெருவில் நாதியற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகத்திற்காய்

நீ தந்து
விட்டுப்போன
வலிகளெல்லாம்
எம் உடலோடு
கூடவேயிருக்க
நீ மட்டும் எங்கே
போனாய்
கடந்த காலமே.....?
எதிர்காலமாய்
நீ வந்து
எம் வலிகளை
எம்மிடமிருந்து
எடுத்துப்போ
எதிர்காலமே

10 JUN 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

131800CC

KOHA
JPL

# நன்றியுரை

இந்த ஈரநிலத்தை எதிர்பார்த்து கவிதைத்தொகுப்பு உங்கள் கரங்களில் தவழ உதவிட்ட நல்லுள்ளங்களை மனதால் நேசித்து மகிழ்வுடன் நன்றிகளை நவில்கின்றேன்.

அந்த வகையில் இந்நூலை அச்சேற்றுவதற்கு உதவிய வவுனியூர் இரா.உதயணன் அவர்களுக்கும் இரண்டாம் பதிப்பு செய்ய உதவிய புன்னகை அமைப்பிற்கும் இதய இதழ்களில் மிகப்பெரிய நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய அருட்பணி செபமாலை அடிகளாருக்கும், அணிந்துரை வழங்கிய தமிழ்மணி அகளங்கன் ஐயா அவர்களுக்கும், கருத்துரை வழங்கிய அருட்பணி தமிழ்நேசன் அடிகளாருக்கும் வாழ்த்துரை வழங்கிய மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவர் அவர்களுக்கும் சித்தவைத்தியர் கலாநிதி செல்வ மகேந்திரன் அவர்களுக்கும் மன்னார் கலாசார உத்தியோகத்தர்களான திருமதி.மணிசேகரன் மற்றும் திருமதி.சுகிர்தா அவர்களுக்கும், இன்னுமாய் பல்வேறு வகையிலும் என் வளர்ச்சிக்கு தோள்கொடுத்து உதவிடும் பேசாலை மன் பற்றிமா மத்திய மகாவித்தியாலய என் வகுப்பு தோழர்களுக்கும், இந்நூலை சிறந்த முறையில் வடிவமைத்து அச்சிட்டுத்தந்த விஜய் அச்சுப் பதிப்பகத்தினருக்கும் அச்சகத்தினர் அவர்களுக்கும் எனக்கு வாழ்வு கொடுத்து என்னை வாழ வைக்கும் என் மனைவி லீனாவுக்கும் என் அம்மாவுக்கும் என்றென்னும் என் இணையில்லா நன்றிகள்......

பொதுசனநூலகம்
10 JUN 2020
மாநக
யாழ்ப்


276708

மன்னார்
பெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர் பற்றி..

மன்னார் கவிஞர் பிரான்சிஸ் பெனில்டஸ் அவர்களின் ஈர நிலத்தை தேடி என்ற இந்த நூலினை புன்னகை அமைப்பு வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது நாட்டின் சூழலையும், மக்களின் வலிகளையும், ஆதங்கங்களையும் வெளிப்படுத்தும் முகமாக வெளிவரும் ஈர நிலத்தை தேடி என்னும் நூலின் சிறப்பு எட்டுத்திக்கும் ஒலிக்க எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டு மக்களுடன் மக்களாக வடுக்களுடனும் வலிகளுடனும் வாழ்ந்து வரும் பிரான்சிஸ் பெனில்டஸ் அவர்கள் இந்த நூலை வெளியிடுவது வரவேற்கத்தக்கதாகும்.

தனது திறமையாலும் கடின உழைப்பாலும் சமூகத்திற்கு பல கவிதை நூல்களை வழங்கிய கவிஞர் பிரான்சிஸ் பெனில்டஸ் அவர்கள் எதிர்வரும் காலங்களிலும் கவிதைத் தொகுப்புக்களை வழங்க புன்னகை அமைப்பு தனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

**திரு.கந்தையா ஷர்மிலன்**
தலைவர்
புன்னகை அமைப்பு
Smile Foundation Charity Organization

SMILE FOUNDATION
FOR EDUCATION & LIVELIHOOD
புன்னகை அமைப்பு

9789553828309
Rs.250/-
VIJAY PRINTING PRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org